TNPD020008742023

**தலைமை நீதித்துறை நடுவர்  நீதிமன்றம், புதுக்கோட்டை**

**முன்னிலை . திரு.K.S.பால்பாண்டியன், B.A., B.L.,**
**தலைமை நீதித்துறை நீதிபதி, புதுக்கோட்டை**

**2025–ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29–ம் நாள் திங்கட்கிழமை**

**அமர்வு வழக்கு எண். 88/2019**
(முதல்நிலை பதிவு வழக்கு எண்.3/2019 – நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, புதுக்கோட்டை)

| வ.எண். | தலைப்புகள் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | காவல்நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | திருக்கோகர்ணம் காவல் நிலையம், குற்ற எண்.117/2019. |
| 2. | எதிரிகளின் பெயர் மற்றும் வயது | 1. மணிகண்டன் (20/19),<br>2. உதயநிதி (21/2019),<br>3. பீர் முகமது (21/19)<br>4. சந்தோஷ்குமார் (25/19),<br>5. கணேசன் (22/2019). |
| 4. | எதிரிகளின் தந்தை பெயர். | 1. பழனி,<br>2. ஆறுமுகம்,<br>3. நத்தர்ஷா,<br>4. செல்லத்துரை,<br>5. சுப்பையா |
| 5. | தொழில் | --- |
| 6. | முகவரி | **1, 3 முதல் 5 எதிரிகளின் முகவரி**<br>மாயாண்டிசாமி நகர்,<br>திருவாப்பூர்,<br>புதுக்கோட்டை. |

| | | |
|---|---|---|
| | | **2 வது எதிரியின் முகவரி**<br>வ.உ.சி. நகர், திருவாப்பூர்,<br>புதுக்கோட்டை. |
| 7. | சம்பவ தேதி | 17.06.2019 |
| 8. | புகார் அளித்த தேதி | 17.06.2019 |
| 9. | கைது செய்யப்பட்ட தேதி | 1 to 4 – 17.06.2019,<br>5 – 04.07.2019 |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட தேதி | 1 to 4 – 02.07.2019<br>5. – 11.07.2019. |
| 11. | ஒப்படைப்பு தேதி | –– |
| 12. | எதிரிகளிடம் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வினவப்பட்ட நாள். | 05.05.2025 |
| 13. | விசாரணை துவங்கிய நாள் | 10.06.2025 |
| 14. | விசாரணை முடிவுற்ற நாள் | 23.09.2025 |
| 15. | எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவிய நாள் | 24.09.2025 |
| 16. | தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட நாள் | 29.09.2025 |

| வ.எண். | தலைப்புகள் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையீட்டாளரின் பெயர்: | காவல் ஆய்வாளர், திருக்கோகர்ணம் காவல் நிலையம். |
| 2. | குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்கள்: | 1. மணிகண்டன் (எ) புரோட்டா மணிகண்டன் (20/19),<br>2. உதயநிதி (21/2019),<br>3. பீர் முகமது (21/19) |

| | | |
|---|---|---|
| | | 4. சந்தோஷ்குமார் (25/19),<br>5. கணேசன் (22/2019). |
| 3. | வனையப்பட்ட குற்றச்சாட்டுகள்: | எதிரிகள் மீது இதச பிரிவு 399 ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையபட்டுள்ளது. |
| 4. | குற்றம் சாட்டப்பட்டவர்களின் பதில் : | குற்றவாளிகள் அல்ல. |
| 5. | இந்நீதிமன்றத்தின் முடிவு: | எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| 6. | தண்டனை அல்லது உத்தரவு: | இல்லை. |

இவ்வழக்கு 29.09.2025-ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு பொது வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ரகுபதி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், வழக்கின் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்து இன்று வரை என் பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

1 முதல் 5 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 399 இன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

2) **<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-</u>**

கடந்த 17.06.2019 ம் தேதி மதியம் 12 மணியளவில் திருவப்பூர் சின்ன இரயில்வே கேட் அருகில் இவ்வழக்கின் எதிரிகளான 1. மணிகண்டன், 2. உதயநிதி, 3. பீர் முகமது, 4. சந்தோஷ்குமார், 5. கணேசன் ஆகிய ஐந்து பேரும் மது அருந்திவிட்டு கூடியிருந்ததாகவும், அப்போது போலிசார் அங்கு சென்று

அவர்களை சோதனை செய்தபோது 1 வது எதிரி மணிகண்டன் மற்றும் 2 வது எதிரி உதயநிதி ஆகிய இருவரும் தலா ஒரு கத்தி வைத்திருந்ததாகவும், 3 வது எதிரி பீர் முகமது ஆச்சி மிளகாய் பொடி பாக்கெட் ஒன்று வைத்திருந்ததாகவும், 4 வது எதிரி சந்தோஷ்குமார் ஒரு மஞ்சள் நிற நைலான் கயிரை வைத்திருந்ததாகவும், பின்னர் எதிரிகளை போலிசார் விசாரித்தபோது எதிரிகள் தங்களுக்கு மது, சூது மற்றும் கஞ்சா அடிக்கும் பழக்கம் உள்ளது என்றும், அதற்கு பணம் தேவைப்படும்போது சிறுசிறு திருட்டு செயல்களில் ஈடுபட்டு அதன்மூலம் கிடைக்கும் பணத்தில் ஆடம்பரசெலவு செய்துவந்ததாகவும், இந்நிலையில் மேற்படி ஆடம்பர செலவுகள் செய்ய பணம் இல்லாததால் சம்பவத்தன்று அனைவரும் ஒன்று கூடி மது அருந்திவிட்டு அந்த வழியாக வருவோர் போவோரிடம் அருவாளை காட்டி மிரட்டி மிளகாய் தூளை கண்ணில் தூவி கயிறால் அவர்களை கட்டி, அவர்களிடம் உள்ள நகை மற்றும் பணத்தை கொள்ளையடித்து அதை சமமாக பிரித்துக்கொள்ளலாம் என திட்டம் தீட்டியதாகவும் கூறியதன்பேரில் எதிரிகள் மீது இதச பிரிவு 399-ன் கீழ் திருக்கோகர்ணம் காவல்நிலைய போலிசார் வழக்குப்பதிவு செய்ததாகவும், சாட்சிகளை விசாரித்ததிலிருந்தும், சான்றாவணங்களை பரிசீலித்ததிலிருந்தும் எதிரிகளை கைது செய்தபோது கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்ட சான்று பொருளிலிருந்தும், எதிரிகள் மீதான வழக்கு உண்மையென தெரியவந்ததால் எதிரிகள் மீது மேற்படி பிரிவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக அரசு தரப்பு வழக்கு அமைந்துள்ளது.

3) புதுக்கோட்டை நீதித்துறை நடுவர் எண்.2 அவர்கள் இவ்வழக்கின் கோப்புகளை ஆராய்ந்து முதல்நிலை பதிவு வழக்கு எண்.3/2019 என கோப்பிற்கு எடுத்து எதிரிகள் ஆஜரானவுடன் அவர்களுக்கு வழக்கு நகல்களை வழங்கி, முதல் நிலை விசாரணையை மேற்கொண்டதில் தாவா வழக்கு அமர்வு

நீதிமன்றம் முன்பாக விசாரிக்கப்பட வேண்டிய வழக்காக இருந்ததால் மேற்படி வழக்கை கு.வி.மு.ச.பிரிவு 209–ன் கீழ் மாண்பமை புதுக்கோட்டை முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்ப உத்தரவிட்டுள்ளார். மாண்பமை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் இவ்வழக்கினை கோப்புக்கு எடுத்து இந்நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணைக்கு அனுப்பியுள்ளது.

4) எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் இருதரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்து எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய முகாந்திரம் இருந்ததால், 1 முதல் 5 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவு 399 இன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் விளக்கிக்கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டினை மறுத்தனர். எதிரிகள் குற்றச்சாட்டினை மறுத்த காரணத்தால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

5) இந்த வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 சாட்சிகளும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்களும், சா.பொ.1 மற்றும் சா.பொ.4 சான்றுபொருள்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>6) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–</u>**

6.1) அ.சா.1 வேம்புராஜ் தனது சாட்சியத்தில் தான் தற்போது K.புதுப்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு உதவியாளராக பணிசெய்து விருப்ப பணி ஓய்வு

பெற்றுவிட்டதாகவும், கடந்த 17.06.2019ம் தேதியில் திருக்கோகர்ண காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது மதியம் 12 மணியளவில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கனகராஜ் மற்றும் முதல் நிலை காவலர் 622 திரு.சின்னு, மற்றும் காவலர் pc2025 சையது அப்துல்காதர், காவலர் 1516 கார்த்திக் ஆகியோருடன் திருவப்பூர் மியூசியம் ஆகிய இடங்களில் குற்ற தடுப்பு பணியில் இருந்தபோது சின்னரயில்வே கேட் அருகே சிலர் சந்தேகப்படும்படி இருப்பதாக இரகசிய தகவல் கிடைத்ததன்பேரில் அங்கு சென்ற பார்த்தபோது போலிஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டவுடன் ஓட எத்தனித்தவர்களை சகிதம் வளைத்து பிடித்த போது 4 பேரை பிடித்துவிட்டதாகவும், ஒருவர் ஓடிவிட்டார் என்றும், அவர்களை விசாரணை செய்ததில் 1.மணிகண்டன் என்ற புரோட்டா மணி வயது 20, 2. உதயநிதி, 3. பீர்முகமது, 4. சந்தோஷ்குமார் என்று பெயர் விலாசம் சொன்னதாகவும், ஓடிய நபரை பற்றி கேட்க அவர் சுப்பையா மகன் கணேசன் என்று கூறினார்கள் என்றும், இவர்களை சோதனை செய்ததில் மணிகண்டன், உதயநிதி ஆகியோர் இருவரும் ஆளுக்கொரு கத்தி வைத்திருந்ததாகவும், பீர்முகமது என்பவர் ஆச்சி மிளகாய்பொடி வைத்திருந்ததாகவும், சந்தோஷ்குமார் மஞ்சள் நிற நைலான் கயிறு வைத்திருந்ததாகவும், இவர்கள் அனைவரும் அடிக்கடி சிறுசிறு குற்றங்களில் ஈடுபட்டு வருவதாகவும், மது, சூது கஞ்சா ஆகிய பழக்க வழக்கங்கள் அவர்களுக்கு இருந்து வந்ததாகவும், அவர்களுக்கு பணம் தேவைபடுவதால் அங்கு போய் வருபவர்களிடம் கத்தியை காட்டி மிரட்டியும், மிளகாய் பொடியை கண்களில் தூவியும், நைலான் கயிறால் கட்டிபோட்டு நகை பணத்தை பறித்து சமமாக பங்கிட்டு கொள்வதாகவும் கூறினார்கள் என்றும், இவர்களிடம் காரணம் கூறி 12.00 மணியளவில் கைது செய்து பிறகு கனகராஜ் அவர்கள் 12.30 முதல் 13.30 வரை எதிரி ஆஜர் செய்த பொருட்களை மகஜரில் கைப்பற்றியதாகவும், அதன் பிறகு 14.15 மணிக்கு கைப்பற்றிய பொருட்களுடன்

எதிரிகளை காவல் நிலையம் அழைத்து சென்று உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ததாகவும், நிலைய குற்ற எண்.117/2019 சட்டப்பிரிவு 399, இதச படி பதிவு செய்ததாகவும், அதற்கு தான் உதவியாக இருந்ததாகவும், தன்னை உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார் என்றும், 2 கத்திகள் மற்றும் மிளகாய் பொடி பாக்கெட்டுகள் மற்றும் நைலான் கயிறுதான் எதிரிகளிடம் இருந்து சிறப்பு உதவி ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6.2) அ.சா.2 சின்னு தனது சாட்சியத்தில், தான் தற்போது அரியலூர் மாவட்டம் திருமானூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 17.06.2019ம் தேதியில் திருக்கோகர்ணம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் இருந்தபோது மதியம் 12 மணியளவில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கனகராஜ் மற்றும் தலைமை காவலர் திரு.வேம்புராஜ், மற்றும் காவலர் pc2025 சையது அப்துல்காதர், காவலர் 1516 கார்த்திக் ஆகியோருடன் தானும் திருவப்பூர் மியூசியம் ஆகிய இடங்களில் குற்ற தடுப்பு பணியில் இருந்தபோது சின்னரயில்வே கேட் அருகே சிலர் சந்தேகப்படும்படி இருப்பதாக இரகசிய தகவல் கிடைத்ததன்பேரில் அங்கு சென்று பார்த்தபோது போலிஸ் பார்ட்டியாகிய தங்களை கண்டவுடன் ஓட எத்தனித்தவர்களை சகிதம் வளைத்து பிடித்த போது 4 பேரை பிடித்துவிட்டதாகவும், ஒருவர் ஓடிவிட்டார் என்றும், அவர்களை விசாரணை செய்ததில் 1.மணிகண்டன் என்ற புரோட்டா மணி வயது 20, 2. உதயநிதி, 3. பீர்முகமது, 4. சந்தோஷ்குமார் என்று பெயர் விலாசம் சொன்னதாகவும், ஓடிய நபரை பற்றி கேட்க அவர் சுப்பையா மகன் கணேசன் என்று கூறினார்கள் என்றும், இவர்களை சோதனை செய்ததில் மணிகண்டன், உதயநிதி ஆகியோர் இருவரும் ஆளுக்கொரு கத்தி வைத்திருந்ததாகவும், பீர்முகமது என்பவர் ஆச்சி மிளகாய்பொடி வைத்திருந்ததாகவும். சந்தோஷ்குமார் மஞ்சள் நிற நைலான் கயிறு வைத்திருந்ததாகவும். இவர்கள் அனைவரும்

அடிக்கடி சிறுசிறு குற்றங்களில் ஈடுபட்டு வருவதாகவும், மது, சூது, கஞ்சா ஆகிய பழக்க வழக்கங்கள் அவர்களுக்கு இருந்து வந்ததாகவும், அவர்களுக்கு பணம் தேவைபடுவதால் அங்கு போய் வருபவர்களிடம் கத்தியை காட்டி மிரட்டியும், மிளகாய் பொடியை கண்களில் தூவியும், நைலான் கயிறால் கட்டிபோட்டு நகை பணத்தை பறித்து சமமாக பங்கிட்டு கொள்வதாகவும் கூறினார்கள் என்றும், இவர்களிடம் காரணம் கூறி 12.00 மணியளவில் கைது செய்து பிறகு கனகராஜ் அவர்கள் 12.30 முதல் 13.30 வரை எதிரி ஆஜர் செய்த பொருட்களை மகஜரில் கைப்பற்றினார். அதன்பிறகு 14.15 மணிக்கு கைப்பற்றிய பொருட்களுடன் எதிரிகளை காவல் நிலையம் அழைத்து சென்று உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ததாகவும், நிலைய குற்ற எண்.117/2019 சட்டப்பிரிவு 399, இதச படி பதிவு செய்தார். அதற்கு நான் உதவியாக இருந்ததாகவும், தன்னை உதவி ஆய்வாளர் விசாரணை செய்ததாகவும், 2 கத்திகள் மற்றும் மிளகாய் பொடி பாக்கெட்டுகள் மற்றும் நைலான் கயிறுதான் எதிரிகளிடம் இருந்து சிறப்பு உதவி ஆய்வாளர் கைப்பற்றியதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

6.3) அ.சா.3 சையது அப்துல் காதர் தனது சாட்சியத்தில், தான் தற்போது புதுக்கோட்டை நகர காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 17.06.2019ம் தேதியில் திருக்கோகர்ணம் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியில் இருந்தபோது மதியம் 12 மணியளவில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கனகராஜ் மற்றும் தலைமை காவலர் திரு.வேம்புராஜ், மற்றும் காவலர் திரு.சின்னு, காவலர் 1516 கார்த்திக் ஆகியோருடன் நானும் திருவப்பூர் மியூசியம் ஆகிய இடங்களில் குற்ற தடுப்பு பணியில் இருந்தபோது சின்னரயில்வே கேட் அருகே சிலர் சந்தேகப்படும்படி இருப்பதாக இரகசிய தகவல் கிடைத்ததன்பேரில் அங்கு சென்ற பார்த்தபோது

போலிஸ் பார்ட்டியாகிய தங்களை கண்டவுடன் ஓட எத்தனித்தவர்களை சகிதம் வளைத்து பிடித்த போது 4 பேரை பிடித்துவிட்டதாகவும், ஒருவர் ஓடிவிட்டதாகவும், அவர்களை விசாரணை செய்ததில் 1.மணிகண்டன் என்ற புரோட்டா மணி வயது 20, 2. உதயநிதி, 3. பீர்முகமது, 4. சந்தோஷ்குமார் என்று பெயர் விலாசம் சொன்னதாகவும், ஓடிய நபரை பற்றி கேட்க அவர் சுப்பையா மகன் கணேசன் என்று கூறினார்கள் என்றும், இவர்களை சோதனை செய்ததில் மணிகண்டன், உதயநிதி ஆகியோர் இருவரும் ஆளுக்கொரு கத்தி வைத்திருந்ததாகவும், பீர்முகமது என்பவர் ஆச்சி மிளகாய்பொடி வைத்திருந்ததாகவும். சந்தோஷ்குமார் மஞ்சள் நிற நைலான் கயிறு வைத்திருந்ததாகவும். இவர்கள் அனைவரும் அடிக்கடி சிறுசிறு குற்றங்களில் ஈடுபட்டு வருவதாகவும், மது, சூது கஞ்சா ஆகிய பழக்க வழக்கங்கள் அவர்களுக்கு இருந்து வந்ததாகவும், அவர்களுக்கு பணம் தேவைபடுவதால் அங்கு போய் வருபவர்களிடம் கத்தியை காட்டி மிரட்டியும், மிளகாய் பொடியை கண்களில் தூவியும், நைலான் கயிறால் கட்டிபோட்டு நகை பணத்தை பறித்து சமமாக பங்கிட்டு கொள்வதாகவும் கூறினார்கள் என்றும், இவர்களிடம் காரணம் கூறி 12.00 மணியளவில் கைது செய்து பிறகு கனகராஜ் அவர்கள் 12.30 முதல் 13.30 வரை எதிரி ஆஜர் செய்த பொருட்களை மகஜரில் கைப்பற்றினார். அதன்பிறகு 14.15 மணிக்கு கைப்பற்றிய பொருட்களுடன் எதிரிகளை காவல் நிலையம் அழைத்து சென்று உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். நிலைய குற்ற எண்.117/2019 சட்டப்பிரிவு 399, இதச படி பதிவு செய்தார். அதற்கு நான் உதவியாக இருந்ததாகவும், தன்னை உதவி ஆய்வாளர் விசாரணை செய்ததாகவும், 2 கத்திகள் மற்றும் மிளகாய் பொடி பாக்கெட்டுகள் மற்றும் நைலான் கயிறுதான் எதிரிகளிடம் இருந்து சிறப்பு உதவி ஆய்வாளர் கைப்பற்றப்பட்டதாகவும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6.4) அ.சா.4 கனகராஜ் தனது சாட்சியத்தில், தான் தற்போது அறந்தாங்கி உட்கோட்டம் நாகுடி காவல் நிலையத்தில காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 17.06.2019 தேதியில் மதியம் 12.00 மணியளவில் தலைமை காவலர் திரு.வேம்புராஜ், காவலர் திரு.சையது அப்துல் காதர், முதல் நிலை காவலர் திரு.சின்னு ஆகியோர்களுடன் குற்ற தடுப்பு சம்மந்மதாக நிலையத்தில் இருந்து புறப்பட்டு திருக்கோகர்ணம், மியூசியம், திருவாப்பூர் ஆகிய இடங்களில் ரோந்து பணியில் இருந்து கண்காணித்த போது திருவாப்பூர் சின்ன ரயில்வே கேட் அருகில் சந்தேகத்திற்கு இடமான 5 நபர்கள் கூடியிருப்பதாக தங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அங்கு சென்று அங்கு கூடியிருந்த நபர்கள் தங்களை கண்டதும் ஓட எத்தனித்தவர்களை போலிஸ் பார்ட்டி சுற்றி வளைத்து பிடிக்க ஒரு நபர் தப்பி ஓடிவிட்டதாகவும், மற்ற நான்கு நபர்களை வளைத்து பிடித்து பெயர், முகவரி விசாரித்தபோது 1.மணிகண்டன் என்ற புரோட்டா மணிகண்டன் வயது 20/19, த.பெ.பழனி, மாயாண்டிசாமி நகர், 2. உதயநிதி வயது 21/19, மாயாண்டிசாமி நகர்,திருவாப்பூர், 3.பீர்முகமது, வயது 21/19, த.பெ.நத்தர்ஷா, 98 மாயாண்டிசாமி நகர், 4.சந்தோஷ்குமார், வயது 25/19, த.பெ.செல்லதுரை, மாயாண்டிசாமி நகர், திருவாப்பூர், தப்பியோடிய நபர் யார் என்று விசாரிக்க அம்பாள்புரம் காலனியை சேர்ந்த சுப்பையா மகன் கணேசன் என்று கூறினார்கள் என்றும், பிடிபட்ட நபர்களை சோதனை செய்து பார்த்தபோது 1வது எதிரி மணிகண்டன் பெரிய கத்தியையும், 2வது எதிரி உதயநிதி சிறிய கத்தியையும் வைத்திருந்ததாகவும், 3வது எதிரி பீர்முகமது ஆச்சிமசாலா பொடி பாக்கெட்டும், 4வது எதிரி சந்தோஷ்குமார் மஞ்சள் நிற நைலான்கயிறும் வைத்திருந்தார். பின்னர் பிடிபட்ட நபர்களை விசாரிக்க பிறகு அவர்களை குற்ற காரணம் கூறி 12.00 மணிக்கு கைது செய்தும், அங்கு பொதுமக்கள் யாரும் சாட்சிகளாக முன்வராததால் உடனிருந்த காவலர்கள் முன்னிலையில் எதிரி 1 முதல் 4 வரை

உள்ளவர்களிடம் இருந்த கத்திகள், மிளகாய்பொடி, மஞ்சள் நிற நைலான் கயிறு ஆகியவைகளை சாட்சிகள் 1.திரு.வேம்புராஜ் 2. சையது அப்துல்காதர் ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும், ஆச்சி மசாலா மிளகாய் பொடி பாக்கெட் சா.பொ.1. மஞ்சள் நிற நைலான் கயிறு சா.பொ.2. 32செ.மீ நீளமுள்ள கத்தி சா.பொ.. 62 செ.மீ நீளமுள்ள கத்தி சா.பொ.4. ஆகும் என்றும், கைப்பற்றப்பட்ட பொருள்கள் மற்றும் தடயங்களுடன் நிலையம் வந்து 1 முதல் 5 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 399ன் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4. இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6.5) அ.சா.5 பெரியசாமி தனது சாட்சியத்தில், தான் தற்போது திருச்சி மாவட்டம் பொன்மலை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளரைாக பணிபுரிந்து வருவதாகவும், தான் கடந்த 04.07.2019 தேதியில் திருக்கோகர்ண காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது திருக்கோர்ண காவல் நிலைய குற்ற எண்.117/2019, இதச பிரிவு 399 வழக்கை பதிவு செய்து காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கனகராஜ் என்பவர் இது சம்மந்தப்பட்ட 1 முதல் 4 வரை எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்திருந்த வழக்கை தனது விசாரணைக்கு எடுத்து கொண்டு 5 வது எதிரி கணேசன் என்பவரை திருவப்பூர் அம்பாள்புரம் காலனி, திருவப்பூர் கேட் அருகே வைத்து காரணம் கூறி கைது செய்ததாகவும், இது சம்மந்தமாக திருக்கோர்ண காவல் ஆய்வாளர் தன்னை விசாரணை செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.6) அ.சா.6 கருணாகரன் தனது சாட்சியத்தில், தான் தற்போது செம்மனார்கோவில் காவல் நிலையத்தில் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இதற்கு முன்பு திருக்கோகர்ண காவல் நிலைய வட்ட ஆய்வாளராக பணிபுரிந்த போது திருக்கோகர்ண காவல் நிலைய குற்ற எண்.117/2019 என்ற வழக்கினை 04.07.2019 தேதியில் தனது விசாரணைக்கு எடுத்து கொண்டு ஏற்கனவே சிறப்பு உதவி ஆய்வாளர் கனகராஜ் விசாரித்து வாக்குமூலம் பெற்றிருந்த சாட்சிகளை விசாரிக்க அவரிடம் கூறியதுபோலவே தன்னிடமும் கூறியதால் தான் தனியாக எந்த வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை என்றும், 05.07.2019 தேதியில் இவ்வழக்கு பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் கனகராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கின் 5 வது எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்த உதவி ஆய்வாளரை விசாரித்தும், இறுதியாக அன்றைய தினமே எதிரிகள் மணிகண்டன், உதயநிதி, பீர்முகமது, சந்தோஷ்குமார் மற்றும் கணேசன் ஆகியோர் மீது சட்டபிரிவுகள் 399 இதச படி இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313–ன் படி எதிரிகளிடம் கேள்வி எழுப்பியதில் அந்த சாட்சியங்கள் பொய் சாட்சியம் என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்றும் எடுத்துரைத்ததால் எதிரிகள் தரப்பு சாட்சியத்திற்கு கால அவகாசம் வழங்கிய நிலையில் எதிரிகள் தரப்பில் சாட்சி எவரும் விசாரித்துக்கொள்ளப்படாததால் எதிரிகள் தரப்பு சாட்சியம் இல்லை என்று முடிக்கப்பட்டு, இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

8) **இந்நிலையில் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்.**

1 முதல் 5 எதிரிகளின் மீது வனையப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு 399 இன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்குஅப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

9) **தீர்வு.**

17.06.2019 தேதியில் முற்பகல் 11 மணியளவில் திருக்கோகர்கணம் காவல்நிலைய சிறப்பு உதவி ஆயவாளர் கனகராஜ் என்பவருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் தலைமைக்காவலர் வேம்புராஜ், முதல்நிலைக்காவல் சின்னு, காவலர் சையது அப்துல் காதர், மற்றொரு காவலர் கார்த்திக் ஆகியோருடன் திருக்கோகர்ணம், மீயூசியம், திருவப்பூர் ஆகிய இடங்களில் குற்ற தடுப்பு சம்மந்தமாக கண்காணிக்கும்போது திருவப்பூர் சின்ன இரயில்வே கேட் அருகில் சந்தேகத்திற்கிடமான நிலையில் 5 நபர்கள் கூடியிருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் அங்கு சென்றபோது மேற்படி நபர்கள் போலீசாரை பார்த்ததும் தப்பி ஓட முயற்சித்தவர்களை போலீசார், 1 முதல் 4 எதிரிகளை வளைத்து பிடித்ததாகவும், 5 வது எதிரி மட்டும் தப்பி ஓடிவிட்டதாகவும், பிடிபட்ட நபர்களை விசாரணை செய்தபோது 1, 2 எதிரிகள் ஆளுக்கொரு கத்தி வைத்திருந்தாகவும், 3 வது எதிரி ஆச்சி மிளகாய் பொடி பாக்கெட் ஒன்றை வைத்திருந்ததாகவும், 4 வது எதிரி மஞ்சள் நிற நைலான் கயிறு வைத்திருந்தாகவும், எதிரிகள் அனைவரும் அந்த பொருட்களை வைத்து அங்கு வருவோர் போவோரை மிரட்டி பணம் பறிப்பதற்காகவும், நகைகளளை கொள்ளையடிப்பதற்காகவும் தயாராக இருந்ததாக தெரியவந்ததால் 1 முதல் 4 எதிரிகளை கைது செய்து அவர்களிடமிருந்த பொருட்களை மகஜரில் கைப்பற்றி

எதிரிகள் மீது இதச பிரிவு 399 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாகவும், அரசு தரப்பு வழக்கு அமைந்திருந்தபோதிலும், தாவா வழக்கில் தனிநபர் எவரும் வழக்கு சம்பவம் குறித்து புகார் எதுவும் அளித்திருக்கவில்லை. சம்பவம் குறித்து இரகசிய தகவல் கிடைத்து சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லும் எதிரிகளை கைது செய்து சான்றுபொருட்களை கைப்பற்றி கிட்டத்தட்ட புலன் விசாரணை அனைத்தையும் முடித்து எதிரிகள் மீது இதச பிரிவு 399 ன் கீழ் முதல் தகவல் அறிக்கையையும், அ.சா.4 சிறப்பு காவல் உதவி ஆய்வாளரே மேற்கொண்டிருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல. வழக்கு சம்பவம் குறித்து அ.சா.4 சிறப்பு காவல் உதவி ஆய்வாளருக்கு இரகசிய தகவல் கிடைத்த நிலையில் எதிரிகளை கைது செய்து அவர்களிடமிருந்து சான்று பொருட்களை கைப்பற்றியது குறித்தும், சம்பவம் குறித்தும் அ.சா.4 காவல் உதவி ஆய்வாளர் அவருடைய மேல் அதிகாரிக்கு அறிக்கை எதுவும் தாக்கல் செய்திருக்கவில்லை. இந்த வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டதாக சொல்லும் அ.சா.6 காவல் ஆய்வாளர் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை மட்டுமே தாக்கல் செய்துள்ளார். எதிரிகளை கைது செய்து அவர்களிடமிருந்து வழக்கில் சம்மந்தப்பட்டுள்ள சான்று பொருட்களை கைப்பற்றி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெற்று எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கையையும் அ.சா.4 சிறப்பு காவல் உதவி ஆய்வாளரே பதிவு செய்துள்ளதால் வழக்கு விசாரணையானது முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

10) சம்பவ இடமானது ஆள் நடமாட்டம் அதிகமாகவும், கடைகள் மற்றும் வியாபார ஸ்தலங்கள் நிறைந்த இடமாகவும் இருந்து காணப்பட்டபோதிலும், அந்த இடத்தில் உள்ள பொதுமக்களை வழக்கு சம்பவம் குறித்த சாட்சிகளாக விசாரணை மேற்கொண்டிருக்காமல் காவல் அலுவலர்களை மட்டுமே வழக்கு

சம்பவம் சம்மந்தமான சாட்சிகளாக விசாரித்திருப்பது மேற்படி சாட்சிகளின் சாட்சியத்தை பலவீனமான சாட்சிகளாக கருதவே வாய்ப்புள்ளது. எதிரிகள் மீது இதேபோன்ற வேறு வழக்குகள் எதுவும் நிலுவையில் இருந்து வருகிறாதா என்பது குறித்தும், எதிரிகள் மேற்படி குற்ற சம்பவம் போன்றே தொடர்ந்து குற்ற சம்பவத்தை மேற்கொண்டு வருபவர்களா? என்பது குறித்தும், அரசு தரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபித்திருக்கவில்லை. எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லும் பொருட்கள் வெளிச்சந்தையில் எளிதாக கிடைக்கக்கூடிய பொருட்கள் என்பதாகவே தெரியவருகிறது. அதனால் எதிரிகள் மீதான வழக்கு சம்பவம் குறித்து அரசு தரப்பில் தனிநபர் சாட்சிகள் மூலம் போதுமான அளவில் நிரூபித்திருக்கவில்லை என்று கருதி எதிரிகளை வழக்கு குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்க வேண்டுமேன்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

ஆகவே இதன் முடிவில், 1 முதல் 5 எதிரிகளின் மீதான இதச பிரிவு 399ன் கீழான குற்றச்சாட்டை பொறுத்து எதிரிகளை குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து 1 முதல் 5 எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 235(1)—ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட RP.No.10/2024—ல் உள்ள சா.பொ.1 ஆச்சி மிளகாய் பொடி பாக்கெட் – 1, சா.பொ.2 60 செ.மீ. நீளமுள்ள மஞ்சள் நிற நைலான் கயிறு – 1, சா.பொ.3 30 செ.மீ. நீளமுள்ள இரும்பு கத்தி – 1, சா.பொ.4 62 செ.மீ. நீளமுள்ள கத்தி – 1 ஆகியவற்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழித்துவிட உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

K S PAULPANDIAN
Digitally signed by K S PAULPANDIAN
Date: 2025.09.29 17:43:46 +0530

தலைமை குற்றவியல் நீதிபதி,
புதுக்கோட்டை.

**அரசு தரப்பு சாட்சிகள்.**

| | |
|---|---|
| அ.சா.1. | திரு.வேம்புராஜ் (சிறப்பு உதவி ஆய்வாளர்) |
| அ.சா.2. | திரு. சின்னு (தலைமைக்காவலர்) |
| அ.சா.3. | திரு. சையது அப்துல் காதர் (முதல் நிலை காவலர்) |
| அ.சா.4. | திரு. கனகராஜ் (காவல் உதவி ஆய்வாளர்) |
| அ.சா.5. | திரு. பெரியசாமி (காவல் ஆய்வாளர்) |
| அ.சா.6. | திரு. முகமது ஜாபர் (வட்ட காவல் ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்.**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.2 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.2 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.3. | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.4. | முதல் தகவல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்றுபொருட்கள்.**

சா.பொ.1 ஆச்சி மசாலா மிளகாய் பொடி பாக்கெட்

சா.பொ.2 மஞ்சள் நிற நைலான் கயிறு.

சா.பொ.3 32 செ.மீ. நீளமுள்ள கத்தி

சா.பொ.4 62 செ.மீ. நீளமுள்ள கத்தி

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் :</u> இல்லை.**

K S PAULPANDIAN
Digitally signed by K S PAULPANDIAN
Date: 2025.09.29 17:43:54 +0530

தலைமை குற்றவியல் நீதிபதி,
புதுக்கோட்டை.

தலைமை குற்றவியல் நீதிமன்றம்,
புதுக்கோட்டை.
அமர்வு வழக்கு எண்.88/2019
தீர்ப்புரை நாள். 29.09.2025.